முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.
நாள். 23.03.2026.

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.
அசல் வழக்கு எண். 94/2024

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் நாள் திங்கட்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம் உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாக்கியலட்சமி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| க/பெ | : | ராதாகிருஷ்ணன் | வயது | : | 54 |
| ஊர் | : | பெரும்புலிமேடு | தொழில் | : | விவசாயம் |

வா.சா. 1 (பாக்கியலட்சுமி) : 2ம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணை:

வழக்கினை நான் என் தம்பியான 1ம் பிரதிவாதி சீனுவாசன் பெயரிலும் அவர் கிரயம் செய்த கார்த்திகேயன் என்பவர் மீதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துக்கள் 0.17 சென்ட் ஆகும். என் தம்பி பெயரில் வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது. நான் வா.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்துள்ள பட்டாவின் மொத்த 66.50 ஏர்ஸ் பரப்பு என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டாவானது என் தம்பி சீனுவாசன் பெயரில்தான் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பாகம் கோரிய வழக்கானது 2ம் பிரதிவாதி கிரயம் பெற்ற சொத்திற்கு மட்டும் என்றும் சீனுவாசன் பெயரில் உள்ள மீதி சொத்துக்கள் சேர்க்கவில்லை என்ற காரணத்தினால் என்னுடைய வழக்கானது தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 11 ஆவணத்தின்படி சர்வே எண் 177/2ஏ ல் மொத்தம் 13 ஏர்ஸ் நிலத்தில் 0.04.5 ஏர்ஸ் 11 சென்ட் ஆனது வா.சா.ஆ.11 ஆவணத்தில் உள்ள சாட்சிக் கையொப்பம் என்னுடையது என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது பொய் என்றும் நான் தெரிந்தேதான் மேற்படி ஆவணத்தில் கையொப்பம் செய்தேன் என்றும் தற்போது எனது வழக்கிற்காக நீதிமன்றத்தில் பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2. நந்தகோபால் என்பவர் என்னுடைய மகன் ஆவார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணத்தின் படி 1ம் பிரதிவாதி சீனுவாசன் எனது மகன் நந்தகோபாலுக்கு சர்வே எண் 177/2ஏல் மீதமுள்ள 15 சென்ட்டை கிரயம் செய்துள்ளார் என்று சொன்னால் சரிதான். அதில் நான் சாட்சிக்கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தினை நானும் எனது தம்பியும் கூட்டாக அனுபவிக்கவில்லை என்றாலும் அதனால் நான் பாகம் கோரமுடியாது என்று சொன்னாலும் சரியல்ல. நான் வழக்கு சொத்தினை கூட்டாக அனுபவிக்கவில்லை என் தம்பி தான் பயிர்செய்து அனுபவித்து வந்தார் என்று சொன்னால் சரிதான். ஆனால் சொத்தில் எனக்கும் பங்கு உள்ளது. 2ம் பிரதிவாதி கிரயம் பெற்றள சொத்தினை யார் தற்போது அனுபவித்து வருகிறார்கள் என்றால் தெரியாது. 2ம் பிரதிவாதி சிவா என்பவருக்கு வழக்கு சொத்தினை விற்பனை செய்து அவர்தான் அனுபவித்து வருகிறார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

3. மேற்படி கார்த்திகேயன் என்பவர் சிவாவிடம் தன் சொத்தை விற்பனை செய்ததாக 1ம் பிரதிவாதியிடம் கூறினார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு தெரிந்தேதான் விற்பனை செய்துள்ளார்கள் என்றும் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் முன்னுக்கு முரணாக சொல்கிறேன் என்றாலும் அதனால் எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று சொன்னாலும் சரியல்ல. அதேபோல் சீனுவாசன் எனது மகனுக்கு மீதமுள்ள சொத்தை கிரயம்

செய்ததால் அவரினை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். எனது வழக்கினை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை இத்துடன் முடிவடைகிறது)**

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.03.23 18:46:25 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு